# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## "தேவனுடைய அநாதி திட்டத்தில் வல்லமையான ஊழியம் செய்யப்படுகின்றது"

### போதகர்கள் சபை பணியாளர்களின் அர்ப்பணிப்பு ஆராதனை



ஜனவரி 29, 2017 ஞாயிற்றுக் கிழமை மாலை ஆராதனை அன்று 2017 போதகர்கள் சபை பணியா–ளர்கள் அர்ப்பணிப்பின் ஆராதனை செய்தியாளர் தலைமை போதகர் ஜேராக் லீ அவர்களுடன் நடைபெற்றது.

போதகர்கள், லேவியர்கள் (சபையில் முழுநேர பணியாளர்கள்), மூப்பர்கள், மூத்த கண்க–ாணியைகள், கண்காணிகள், கண்காணியைகள், இளம் கண்காணியைகள், எஸ்தர் குழுவினர் (போதகர்களின் மனைவிகள்), ஜெப அர்ப் பணிப்பாளர்கள் குழுவினர் உட்பட பங்குப் பெற்ற அர்ப்பணிப்பாளர்கள் 9,350 பேர். அர்ப்பணிப்பாளர்கள் மாசான், தேஜூன், க்யுமி, ஹியோசு, தேஜூ, ச்சன்சியோன் உள்பட 43 கிளைசபைகளிலிருந்து வந்து பங்குப் பெற் றனர்.

அர்ப்பணிப்பாளர்கள் விசேஷித்த துதிகளை ஏறெடுத்த பின்பு, தலைமை போதகர் அறிவர். லீ யோவான் 14:12ஆம் வசனத்தின் ஆதாரத்–தின்படி "மேய்ப்பரின் வல்லமை" என்ற தலைப்பில் செய்திகளை பிரசங்கித்தார்.




அர்ப்பணிப்பாளர்கள் தங்களுக்குரிய ஊழியத் துறைகளில் வல்லமையை வெளிப்படுத்தி, தேவனுடைய ராஜ்யத்தை விரிவுப் படுத்த வேண்டும் என்று அவர் செய்தியில் வலியுறுத்தினார். மேலும் மூன்று குறிப்புகளில் எவ்வாறு வல்லமையை நிகழ்த்தவேண்டும் என்றும் அவர் விளக்கினார். முதலாவது, தேவனுடைய ராஜ்யத்திற்கான லாபங்களை மட்டுமே நாம் தேட வேண்டும். இரண்டாவது, நாம் தேவனுடைய மகிமைக்காக மட்டுமே வாழவேண்டும். மூன்றாவது, நாம் ஆத்துமாக்களை நேசிக்க வேண்டும்.

## தேவனுடைய வெகுமதியான மான்மின் துதிகளின் எட்டாம் ஆண்டுவிழா

மான்மின் துதிகளின் எட்டாம் ஆண்டு விழாவை கொண்டாடும் விதத்தில், பிப்ரவரி 3, 2017 வெள்ளி முழு இரவு ஆராதனையின் முதற்பகுதியில், கலைநிகழ்ச்சி குழுவின் தலைவர், போதகர் ஹிஜின் லீ அவர்கள் ஏசாயா 43:21ம் வசனத்தின் அடிப்படையில் "மான்மினின் (சகல சிருஷ்டிகளின்) துதிகள்" என்ற செய்தியை பிரசங்கித்தார்.

மான்மின் துதிகள் என்பவை தேவன்தாமே தந்த பாடல்களின் வரிகள், இராகங்களை குறிக்கின்றன. இது தேவன் இஸ்ரவேலர்களுக்கு மோசேயின் மூலமாக பாடலை கொடுத்தது போலவாகும். அறிவர். லீ இந்த இறுதி காலத்தில் உலகம் பாவத்தால் மிகவும் நிறைந்துள்ளதால் தேவனுக்குப் பிரியத்தை ஏற்படுத்தும் பாடல்களின் தேவை அதிகம் என்பதை உணர்ந்து ஜெபித்தார். அவருடைய ஜெபத்திற்கான பதில்தான் மான்மின் துதிகள்.

பிப்ரவரி 3, 2009 அன்று "கர்த்தரின் அறிக்கை" என்ற பாடல் முதல் பாடலாக கொடுக்கப்பட்டது முதற்கொண்டு இதுவரைக்கும் 314 பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் ஒவ்வொருவரும் பயின்று பாடுவதற்கு எளிதானவை. கொரியாவிற்கு உள்ளேயும் வெளிநாடுகளிலும் இருக்கிற திரளான அங்கத்தினர்கள் தேவனுடைய அன்பை உணர் கின்றனர்; அவர்கள் மான்மின் துதிகளை பாடும் பொழுது அவர்களின் இருதயங்கள் சுத்திகரிக்கப் படுகின்றன. கூடுதலாக, மான்மின் துதிகளின் மூலமாக பரலோகத்திற்கான நம்பிக்கை தரப் படுகிறது; இருள் அகன்றுப்போகிறது; பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன.

பாடல்கள் ஆங்கிலம், எபிரெயம் உட்பட பதினொரு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு விநியோகிக்கப்பட்டாலும், அநேக வெளிநாட்டு விசுவாசிகள் அவைகளை கொரிய மொழியில் பாடுவதையே விரும்புகின்றனர், மிகப் பெரிதான கிருபையை அனுபவிக்கின்றனர்.



## "மான்மின் துதிகளை ரஷியத்தில் பாடுவதால் சந்தோஷமடைகிறேன்"



போதகர் டிமிட்ரி பெட்ரோவ்ஸ்கி, இஸ்ரேல்

1991ல், நானும் என் மனைவியும் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, பெலாரஷியன் மாநில அகாட மியில் இசையை பயின்றோம். தேவன் துதிப்பாடல்கள் மூலமாக எங்கள் ஊழியத்தை நடத்தும்படியான தரிசனத்தை எங்களுக்குக் கொடுத்தார். நாங்கள் அநேக பாடல் ஆல்பத்தை வெளியிட்டோம்; அநேக கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் விழாக்களில் கலைநிகழ்ச்சி நடத்தியிருக்கிறோம். மேலும் கருத்–தரங்குகளையும் நடத்தியுள்ளோம்.

2009ல் தேவன் எங்களை இஸ்ரேலுக்கு வழி நடத்தி, அங்கே மான்மின் தலைமை சபையிலிருந்து வந்திருந்த அறிவர். ஜேராக் லீ அவர்களை சந்திக்கச் செய்தார். அநேக ஆண்டுகளுக்கு முன்பு நான் சீயோலில் உள்ள மான்மின் தலைமை சபைக்கு சென்றிருந்தேன்; அங்கே நான் மான்மின் துதிகளை கேட்டு, மான்மினின் அற்புதமான கலாச்சார நிகழ்ச்சிகளை அனுபவித்தேன்.

மான்மின் பாடல்கள் அநேக ரஷ்யம் பேசும் மக்களுக்கு தொடுதலை தந்து, அவர்கள் தேவனுடைய அன்பை உணரவும், அவருடைய நன்மையான சித்தத்தை புரிந்துகொள்ளவும், பரலோகத்திற்கான நம்பிக்கையை பெற்றுக் கொள்ளவும் உதவும் என்று நான் கருதினேன். அதனால் நான் ரஷ்யத்தில் பாடல்களை மொழிப் பெயர்க்க விரும்பினேன். இஸ்ரேலில் ரஷ்ய மொழி பேசுகிற ஏறக்குறைய 15 லட்சம் மக்கள் வசிக்கின்றனர்.

நானும் என் மனைவியும் மொழிபெயர்ப்பு பணியை ஆரம்பித்தோம். கொரியமும் ரஷியமும் முற்றிலும் வேறுபட்ட மொழிகள். குறிப்பாக அந்தப் பாடல்களில் கொரிய கலாச்சாரங்கள் இருந்ததால், அவைகளை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. எழுத்தின்படியான அர்த்தங்களை மொழி பெயர்க்கவும், தாளத்திற்கு ஏற்ப ரஷ்ய மொழி பெயர்ப்பை ஒன்றிணைக்கவும் உண்மையிலேயே நாங்கள் கடினமாக முயற்சித்தோம். நாங்கள் மிக துல்லியமான வார்த்தைகளுக்காக வழக்கமாக சில மணிநேரங்கள் ஜெபிப்போம். அப்படி கண்டறியும் போது, நாங்கள் பெற்ற மகிழ்ச்சியினை வார்த்தை களால் விவரித்துவிட முடியாது.

தற்பொழுது ரஷ்ய மொழியில் 200க்கும் மேற்பட்ட மான்மின் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நான் மொழிபெயர்த்தபொழுது, தேவனுடைய வார்த்தையை குறித்து அதிகமாக கற்றுக் கொண்டேன்; அர்த்தங்களை சிறப்பாக புரிந்து கொண்டேன். நான் மற்றவர்களோடு மான்மின் துதிப்பாடல்களை பாடும்பொழுது, அவர்கள் அந்தப் பாடல்களினால் அதிக கிருபையை பெறுவதைப் பார்க்கும்பொழுது மிகவும் சந்தோஷமாய் இருக்கிறேன்.

தேவனால் கொடுக்கப்பட்ட தூய்மையான அழகான மான்மின் பாடல்களை சகல தேசங்களின் சகல ஜனங்களும் ஒன்றாய் சேர்ந்து பாடுவார்கள் என நான் நம்புகிறேன். மேலும் தன் தியாகத்தின் செயல்களின்மூலமாக ஆத்துமாக்கள் மீது வைத்துள்ள தம் அன்பை காண்பிக்கின்ற அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

# ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

ஒய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்கார–னானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார் (யாத்திராகமம் 20:8–11)

‘ஒய்வுநாள்’ என்பது ஒய்வுக்காகவும் ஆராதனைக் காகவும் ஏற்படுத்தப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நாளாகும். புதிய ஏற்பாட்டின் காலத்தில் அது “கர்த்தருடைய நாள்” என்று அழைக்கப்படு–கின்றது.

ஒய்வுநாளை ஆசரிப்பது என்பது மற்றுமொரு அடிப்படையான அடையாளமான “முழு தசமபாகம்” செலுத்துதல் என்பதோடு அவன்/அவள் பரலோக குடியுரிமை பெற்ற தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறார்கள் என்பதை காட்டுகிற அடிப்படை செயலாய் இருக்கிறது. இதன் காரணம் தேவனுடைய பிள்ளைகள் கைக்கொள்ள வேண்டிய பத்துக் கட்டளைகளில் இது ஒன்றாய் இருக்கிறது.

## 1. ஒய்வுநாளின் துவக்கமும் அர்த்தமும்

ஆதியாகமம் 2:3ல் வாசிக்கலாம், “தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியை களையெல்லாம் முடித்த பின்பு அதிலே ஓய்ந்திருந்த படியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார்.”

தேவன் ஆறு நாளைக்கு வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தார். ஏழாம் நாளில் ஓய்ந்திருந்–தார். தேவன் இந்த ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார். எகிப்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர்களை விடுவித்த பின்னர் யாத்திராகமம் 20ல் எழுதப்பட்டுள்ளபடி தேவன் ஒய்வுநாளை ஆசரிப்பதைக் குறித்து இந்தக் கட்டளையை கொடுத்தார்.

தேவன் பத்து கட்டளைகளை கொடுத்தபோது, அவர், “ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக... கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்–தமாக்கினார்.”

ஒய்வுநாளை ஆசரிப்பதால் தேவன் தான் சிருஷ்டிகர் என்ற நம்முடைய நம்பிக்கையை காட்டுகிறோம். மேலும், இதன் அர்த்தம் நாம் தேவன் தான் பரந்த ஆவிக்குரிய மண்டலம் மற்றும் இந்த இயற்கை உலகின் எஜமானும் சொந்–தக்காரருமாய் இருக்கிறார் என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். அதாவது, ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பது என்பது தேவனுடைய ஆவிக்குரிய அதிகாரத்தை அங்கீகரிக்கிற செயலாகும்.

## 2. ஒய்வுநாளை நாம் ஆசரிப்பதன் காரணம்

யாத்திராகமம் 31:31ல், தேவன் மோசேயினிடத்தில், “நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்க வேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்றார்.” இஸ்ரவேல் ஜனங்கள் ஒய்வுநாளை ஆசரிப்பதன்மூலமாக தேவனுடைய பரிசுத்த ஜனங்களாக வேறுபிரிக்கப்பட்டார்கள். தேவன் அவர்களை சோதனை பாடுகள் மற்றும் பலவகையான பேரழிவுகளிலிருந்து பாதுகாத்தார்.

இந்த ஆவிக்குரிய கொள்கை இன்றைக்கும் அதே வழியில் பிரயோகிக்கப்படுகிறது. ஒய்வுநாளை ஆசரிப்பதால் அவருடைய பிள்ளைகளாக நாம் தேவனுக்குரியவர்களாக இருக்கும்போது மட்டுமே நாம் பாதுகாக்கப்படவும் ஆசீர்வதிக்கப்படவும் முடியும். பாதுகாக்கப்படுவதும் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பதும் முக்கியம், ஆனால் மிக முக்கியமானது நம்முடைய ஆவியின் இரட்சிப்பே.

யாத்திராகமம் 31:14–15 குறிப்பிடுகிறது, “ஆகையால், ஒய்வுநாளை ஆசரிப்பீர்களாக; அது உங்களுக்குப் பரிசுத்தமானது; அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறவன் கொலையுண்கக்கடவன்; அதிலே வேலைசெய்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்... ஓய்வுநாளில் வேலைசெய்கிறவன் எவனும் கொலைசெய்யப்பட வேண்டும்.” இது ஏனென்றால் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட இஸ்ரவேலர்களாய் இருந்தாலும்கூட, அவர்கள் ஓய்வுநாளை ஆசரிக்காவிட்டால் அவர்களுக்கும் தேவனுக்கும் எந்த சம்பந்தமுமில்லாமல் போய்விடும் என்பதால் அந்த கனப்பொழுதிலிருந்து அவர்களும் மரணத்திற்குள் விழ வேண்டியிருக்கும் என்று சொல்வதற்காகவே.

நம்மை ஒய்வுநாளை ஆசரிக்கச் சொல்கிற தேவனுடைய உண்மையான உள்நோக்கத்தை நாம் புரிந்துக்கொண்டால், நாம் அதை பயத்தினால் கைக்கொள்வதற்கு வலுக்கட்டாயப்படுத்தப்பட்ட–வர்களாக உணரமாட்டோம். தேவன் தமது பிள்ளைகள் மேலுள்ள தமது அன்பினாலே நமக்கு மெய்யான இளைப்பாறுதலை தருவதற்காக ஒய்வுநாளை ஆசரிக்கும்படி நமக்குக் கட்டளை யிட்டுள்ளார். நாம் தேவனுடைய இருதயத்தையும் அன்பையும் உணர்ந்தால் நாம் ஆறு நாளைக்கு கடினமாக உழைப்போம். மேலும் வார நாட்களில் நாம் நம்முடைய இருதயம், சிந்தை மற்றும் விருப்பத்தோடு ஒய்வுநாளுக்காக காத்திருப்போம். பின்பு ஒய்வுநாளில் நாம் ஆவியோடும் உண்மை–யோடும் தொழுது, கிறிஸ்துவிலுள்ள சகோதர சகோதரிகளோடு ஐக்கியம் கொண்டு, தேவனுக்கு நம்முடைய நன்றிகளையும் மகிழ்ச்சியையும் ஏறெடுப்போம்.

## 3. நாம் ஞாயிற்றுக்கிழமையை ஒய்வுநாளாக ஆசரிப்பதன் காரணம்

பழைய ஏற்பாட்டின் காலத்தில், சிருஷ்டிப்பின் ஏழாம் நாளான சனிக்கிழமை ஒய்வுநாளாக ஆசரிக்கப்பட்டது. ஆனால் தேவனுடைய குமார னாகிய இயேசு, மாம்சத்தில் இந்த உலகிற்கு வந்து, இரட்சகரின் கடமையை நிறைவேற்றி, ஞாயிற்றுக்கிழமை அன்று உயிர்த்தெழுந்தார். இது புதிய ஏற்பாட்டின் ஒய்வுநாளாக ஆசரிக்கப்பட்டு வருகிறது.

மாற்கு 16:9 சொல்கிறது, “வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார். அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார்.” பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஓய்வுநாளாக ஆசரிக்கப்பட்ட வாரத்தின் ஏழாம் நாள் சனிக்கிழமையாய் இருந்ததால் வாரத்தின் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமையாகும். இயேசுவானவர் வெள்ளிக்கிழமை அன்று மாலை 3 மணிக்கு சிலுவையிலறையப்பட்டார்; அடக்கம்பண்ணப்பட்ட அவர் சிலுவையிலறையப்பட்டதிலிருந்து மூன்றாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலே உயிரோடெழுந்தார்.

ஆதியாகமம் 1:3 சொல்கிறது, “தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.” இந்த வெளிச்சம் தேவனுடைய அதிகாரத்தையும் வல்லமையையும் அடையாளப் படுத்துகிற ஆவிக்குரிய வெளிச்சமாகும். தேவன் தம்முடைய இறையாண்மையை பிரபஞ்சம் முழு வதும் பிரகடனப்படுத்தினார். இது இயேசு கிறிஸ்துவின் இறையாண்மையின் பிரகடனமா–கவும்கூட இருந்தது. காரணம் அவர்தான் “மெய்யான ஒளி;” தேவனுடைய உருவாக இருந்தவர், அவர்தான் வார்த்தை; மாம்சமாக இவ்வுலகிற்கு வந்தார். யோவான் 1:9ல் சொல்–லப்பட்டுள்ளபடி, “உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.”

அதனால்தான் மத்தேயு 12:8ல் வாசிக்கிறது, “மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்.” இதன் அர்த்தம் நம்முடைய ஆண்டவர்தான் மெய்யான ஒளி, அவர்தான் ஓய்வுநாளின் ஆண்டவர். சிருஷ்டிப்பின் முதல்நாளிலே அன்று வெளிச்சம் இருந்ததுபோல, வாரத்தின் முதலாம் நாள் ஞாயிற்றுக்கிழமை, கர்த்தருடைய நாளிலேதான் மெய்யான ஒளியாயிருக்கிற ஆண்டவர் முழு உலகிற்கும் தம்முடைய வெளிச் சத்தை பிரகாசித்தார்.

அந்த நாளில் தான் இயேசு மரணத்தை மேற்கொண்டு உயிர்த்தெழுந்து மனுக்குலம் அனைத்திற்கான இரட்சிப்பின் வழியை திறந்தார். மரணத்திலும் இருளிலும் வாழ்ந்து கொண்டிருந்த ஆத்துமாக்களுக்காக அவர் மெய்யான ஒளியானார். இந்த நேரத்திலிருந்து நாம் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக அதாவது கர்த்தருடைய நாளாக ஆசரித்து வருகிறோம். ஆண்டவருடைய உயிர்த் தெழுதலுக்குப் பின்னர் தான் நாம் உண்மையான ஓய்வுநாளை ஆசரிக்கலானோம்.

தேவன் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளாக மாறும் என்பதை பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார். லேவியராகமம் 23:10–12 சொல்கிறது, “நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச் சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க் கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கட வீர்கள். உங்களுக்காக அது அங்கீகரிக்கும்படி, ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட வேண்டும். நீங்கள் அந்தக் கதிர்க்கட்டை அசை வாட்டும் நாளில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக் குட்டியையும்... செலுத்தக்கடவீர்கள்.”

ஓய்வுநாளைக்கு மறுநாளிலே கொடுக்கப்பட்ட ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆண் ஆட்டுக்குட்டி என்பது தேவ ஆட்டுக்குட்டியாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது. முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை என்பதும் உயிர்த்தெழுதலின் முதற்பலனான இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது (1 கொரி. 15:20).

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, முதல் மனிதனாகிய ஆதாமின் மீறுதலுக்கு பிற்பாடு மக்கள் அனைவரும் தேவன் அவர்களுக்கு நல்கிய உண்மையான இளைப்பாறுதலை தொலை–லத்துவிட்டனர். மனிதர்களுடைய எஜமானாயிருந்த மனிதர்களுடைய ஆவி மரித்துவிட்டது. அதன் விளைவாக தேவனோடிருந்த அவர்களது தொடர்பு சேதப்பட்டது. அவர்கள் புசிப்பதற்கு கூட தங்கள் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படவேண்டியவர்க–ளாகிவிட்டனர். இறுதியாக அவர்கள் நித்திய மரணமாகிய நரகத்திற்குள் விழ வேண்டியவர்க–ளாகிவிட்டனர்.

குறித்த நேரம் வந்தபோது, சிலுவையிலுள்ள ஆண்டவரின் அன்பில், அவர் மரணத்தை மேற்கொண்டு உயிர்த்தெழுத்து, மக்கள் அனை வருக்கும் இரட்சிப்பின் வழியை திறந்தார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற யாராயிருந்தாலும் பரிசுத்த ஆவியை ஈவாக பெற்று இரட்சிப்பை, நித்திய ஜீவனை, உயிர்த்தெழுதலை மற்றும் பரலே–ாகத்திற்கான நம்பிக்கையை அனுபவிக்கலாம். இருப்பினும், நாம் கர்த்தருடைய நாளை ஆசரித்து தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளும்போது மட்டுமே நாம் நித்தியமான பூரணமான இளைப்பாறு தலைப் பெற முடியும்.

அனைத்து மக்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிற தேவனுடைய சித்தத்தை புரிந்துக் கொண்டு நீங்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என்று ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

### விசுவாசத்தின் அறிக்கை

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]



# உதடுகளின் கனியின்மூலமாக மெய்யான சந்தோஷத்தை அனுபவித்தல்

**நீங்கள் எந்தளவாக பரிசுத்தமும் தூய்மையுமான இருதயத்தை அடையப்பெறுகிறீர்களோ அந்தளவாய் நீங்கள் "உதடுகளின் கனியை" விளைவிக்க முடியும். தேவன் தம்முடைய அன்பான பிள்ளைகளின் ஒவ்வொரு வார்த்தைகளையும் தூதர்கள் மூலமாக பதிவு செய்ய வைத்து அவர்கள் விதைத்ததற்கேற்றபடி அறுவடை செய்யவும், அவர்கள் அறிக்கைகளுக்கு ஏற்றபடி அவர்கள் ஆசீர்வாதம், மகிமை மற்றும் ஞானத்தையும் அனுபவிக்கும்படியும் செய்கிறார். நாம் நம்முடைய வாய்க்கு காவல் வைத்து மாபெரும் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.**

## எந்நேரமும் இனிமையான வார்த்தைகளை கூறுங்கள்

இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஒளஷதமுமாகும் (நீதிமொழிகள் 16:24).

இனிய சொற்கள் சோர்வடைந்து இதயமுடைந்து போகிறவர்களை ஊக்கப்படுத்தி மரித்துக் கொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்கு வாழ்வு கொடுக்கும். மாறாக, பொல்லாத வார்த்தைகள் பிறரின் உணர்வுகளை காயப்படுத்தும், பிரச்சனையை தூண்டும். அவர்களை ஸ்தம்பிக்கச் செய்து இறுதியில் மரணத்திற்குள் தள்ளிவிடும். உங்களுக்கு நல்ல விசுவாசம் இருக்கிறது என்று நினைத்து பிறருக்கு நல்ல புத்திமதி கொடுக்கிறேன் என்ற நினைப்பில் இனிய சொற்களுக்கும் குறைந்த வார்த்தைகளை நீங்கள் பேசுகிறீர்களா?

நற்குணம் நிறைந்த மக்கள் பிறருடைய தவறுகளை அல்லது குறைவுகளை மூட முயற்சித்து அவர்களை ஆவிக்குள் வழிநடத்தும்படிக்கு வாஞ்சையோடு மென்மையாக புத்திமதி கொடுப்பார்கள். அவர்கள் இருதயத்தை அசைக்கும் சத்திய வார்த்தையின் மூலமாக கிருபைகளை கொடுப்பதால் அவர்களை மாற்றத்திற்குள்ளாக வழிநடத்துவர்.

ஆனால் சில மக்கள் ஒரு நபர் செய்கிற சிறிய தவறையும்கூட அவனிடம் மறைமுக விமர்சனம் அல்லது ஏளனமாக பேசுவதின்மூலமாக வாய்ப்பை நழுவவிடாமல் சுட்டிக் காட்டுவார்கள். பிறரின் குறைவுகளைக் குறித்து புரணி பேசி அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு செய்து ஆக்கினை தீர்ப்பவர்கள் உள்ளனர். விளக்கப்பட்டபடி, ஒரே சூழ்நிலையிலும்கூட மக்களின் இருதயத்தில் உள்ள நற்குணம் அல்லது பொல்லாப்பின் அடிப்படையிலே உதடுகளின் வார்த்தைகள் மிகவும் வித்தியாசமாக இருக்கக்கூடும்.

நாம் நம்முடைய வார்த்தைகளை திரும்பி பார்க்க வேண்டும். நீங்கள் வார்த்தைகளால் பிறருடைய உணர்வுகளை காயப்படுத்தி பின் நீங்கள், "விளையாட்டுக்குத்தான்" சொன்னதாக கூறுகிறீர்களா? நீங்கள் உங்களது கெட்ட உணர்வுகளை அல்லது கோபத்தை நீங்கள் பேசிய வார்த்தைகளில் வெளிப்படுத்துகிறீர்களா? உங்களது நல்ல சரீர தோற்றத்தை போன்ற உங்களது பலன்களைக் குறித்து பகட்டாக பேசுகிறீர்களா? உங்களது "சம்பாஷணைகளில்" நீங்கள் பிறரது குறைவுகளை குறித்து கெட்ட எண்ணத்துடன் பேசுகிறீர்களா?

நீங்கள் உங்களைத் தானே நேராக முகத்துக்கு முகம் பார்த்து உங்களுடைய வார்த்தைகளால் பிறரை பழிசாட்டியுள்ளீர்களா என்பதை பரிசோதித்து பாருங்கள்.

சத்தியத்தில் சரியாக இல்லாத வார்த்தைகளை நீங்கள் பேசும்போது, அது உங்கள் இருதயத்தில் தீமையின் ரூபங்கள் எஞ்சியுள்ளது என்பதைக் காண்பிக்கிறது. நீங்கள் உங்களை ஆராய்ந்து அவைகளை கண்டறியுங்கள், அவைகளை தூக்கி எறியும்படி ஊக்கமாக ஜெபம்பண்ணுங்கள். வார்த்தைக்கு மட்டுமே கீழ்ப்படியுங்கள்.

## சமாதானம் உண்டுபண்ணுகிற வார்த்தைகளைப் பேசுங்கள்

யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்த முள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்த மில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபிரெயர் 12:14).

கடல் பயணம் செய்யும்போது படகின் திசையை மாற்றக்கூடிய சுக்கான் மிகச் சிறியது. சுக்கான உடைந்து விட்டால் அல்லது தவறான முறையில் திருப்பப்பட்டால் கடுங்காற்றினால் படகு கவிழ்ந்து விடும் அல்லது ஒரு பெரிய பாறையில் மோதி உடைந்து விடும்.

சரீரத்தில் நாவும் ஒரு சிறிய அவயவம்தான். ஆனால் அதற்கு மகா பெரிய வல்லமை உண்டு. சாலொமோனின் குமாரன் ரெகொபெயாம் சிங்காசனத்திற்கு வந்தபோது, இஸ்ரவேல் மக்கள் அவர் எங்கள் மேல் வைத்த பாரமான நுகத்தையும் இலகுவாக்கும்" என்று ரெகொபெயாமிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவன், "என் தகப்பன் உங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நான் அதை அதிக பாரமாக்குவேன்; என்தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார்; நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன்" என்று பிரதியுத்திரம் சொன்னான். அவனுடைய வார்த்தை இறுதியாக தேசத்தை இரண்டாகப் பிரிந்துபோகச் செய்தது (2நாளாகமம் 10).

இன்றைக்கும்கூட ஒரு நபர், சரீரத்தில் சிறிய அவயவமாய் இருக்கிற தன் நாவை தவறாகப் பயன்படுத்தினால், கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கிற திருச்சபையில் பிரச்சனையை ஏற்படுத்திவிடும். வார்த்தைகள் தவறான புரிந்துக்கொள்ளுதலை கொண்டு வரக்கூடும், மக்கள் இடையில் பிரிவினைகளை உருவாக்கும், சமாதானத்தை உடைக்கும், அதன் வழியாக தேவனை கனஈனப்படுத்தும்.

ஆகவே, உங்கள் வார்த்தைகள் பிறரை முறுமுறுக்கச் செய்தாலோ அல்லது பிறரை ஐக்கியப்படுவதிலிருந்து நிறுத்தினாலோ, முதலாவது நீங்கள் ஜெபித்து உங்கள் வார்த்தைகளை நீங்கள் சற்று திரும்பிப் பார்த்து ஆராய வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் தன் உயிரினால் தேவனுடைய ராஜ்ஜியத்திற்காக உண்மையாய் பணிபுரியவும், பிறரோடு சமாதானமாய் இருக்கவும் தன்னைத்தான் எப்போதும் தியாகம் செய்து பிறருக்கு சேவை புரிந்தார் (1 கொரிந்தியர் 9:19–23). அவர் அநேக ஆத்துமாக்களை இரட்சிக்க விரும்பியதால் வல்லமையை அவர் வெளிப்படுத்தினாலும்கூட பிறருக்கு ஊழியக்காரனைப்போல அவரால் சேவை செய்ய முடிந்தது.

## எந்தவகையான சூழ்நிலையிலும் விசுவாசத்தில் துதியும் ஸ்தோத்திரமும் செலுத்துங்கள்

நீ அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார் (எண்ணாகமம் 14:28).

கணவனாகப் போகிற யோசேப்போடே கன்னி மரியாள் படுக்கவில்லை. இயேசுவை கர்ப்பந்தரிக்கும்போது நியாயப்பிரமாணத்தின்படி அவள் கல்லால் எறியப்படுவாள் என்பதை அவள் அறிந்திருந்தாள்.

ஆனால் அவள் தூதனிடமிருந்து, "இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" என்று சொல்லக்கேட்டாள். அவள் விசுவாசத்தோடு, "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்றாள். மேலும் தனக்கு அருளப்பட்ட தேவனுடைய அருளுக்காக அவள் தேவனை துதித்தாள். அவர் வல்லமை, பரிசுத்தம் மற்றும் இரக்கத்திற்காக துதித்தாள் (லூக்கா 1).

எஸ்தரும்கூட தன் சிறிய தகப்பன் மொர்தெகாய் மூலமாக ஆமான் தன் ஜனத்தை பெர்சியாவில் சிறைகளாய் இருக்கிற யூத மக்களை அழிக்க சதி ஆலோசனை செய்கிறான் என்று கேள்விப்பட்டாள். அவள் தேவனுக்கு மூன்று நாள் உபவாசம் ஏறெடுத்து, "நான் செத்தாலும் சாகிறேன்" என்ற உறுதியோடு இராஜாவினிடத்தில் வந்தாள். காரணம் ராஜாவின் கட்டளையில்லாமல் ராஜ சமூகத்திற்கு வருபவர்கள் நிச்சயம் கொல்லப்படுவார்கள். ஆனால் அவள் தேவனை மட்டுமே சார்ந்துகொண்டு அவள் மரணத்திற்கும்கூட ஆயத்தமாகி தீர்மானம் எடுத்தாள் (எஸ்தர் 4).

பின்பு, தேவன் ராஜாவிற்கு அவளை அருமையானவளாக காணப்பட செய்தார். அவளது ஜனங்கள் காப்பாற்றப்பட்டார்கள். ஆமான்தான் அழிவுக்குள்ளானான்.

பார்க்கிறபடியாக, தேவன் ஒருவன் அல்லது ஒருத்தியினுடைய உதடுகளிலிருந்து வருகிற வார்த்தைகளில் உள்ள விசுவாசத்தை அளக்கிறார். அவர் அவர்களுடைய இருதயங்களை ஆராய்கிறார். ஆகவே, எந்த ஒரு சூழ்நிலையிலும் நல்லவராய் இருக்கிற தேவனை விசுவாசித்து விசுவாசத்தில் துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க வேண்டும்.

# “என் திருமணம் பாறைமீது இருந்தது, எனினும் சந்தோஷத்தை நான் கண்டுகொண்டேன்”



**கண்காணி சங்கி பேக்,**
**வயது 62, 1வது மாகாணம், மான்மின் தலைமை சபை**

2004ல் ஒரு வியாட்நாமிய பெண்ணை நான் திருமணம் செய்துகொண்டேன். ஆனால் மொழி பிரச்சனை மற்றும் கலாச்சார வேறுபாட்டால் அடிக்கடி நாங்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டோம். என் மனைவி இளையவளாக இருந்ததால், ஒன்றை பொறுத்துக்கொள்ள முடியாதபொழுதெல்லாம் வீட்டைவிட்டு ஓடிவிடுவாள். 2006ல் அவளுக்காக ஆராதனையில் வியாட்நாமிய மொழிபெயர்ப்பை வழங்குகிற ஒரு சபையை நான் தேடினேன். நாங்கள் மான்மின் தலைமை சபையை அறிந்து, பதிவு செய்தோம். தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களால் நிகழ்த்தப்படுகிற எண்ணற்ற வல்லமையான கிரியைகளை நான் பார்த்திருக்கிறேன். அதே வேளையில் நானும் ஆச்சரியமான ஒன்றை அனுபவித்தேன்.

2013ல் குளிர்காலத்தில், நான் என் சரக்கு வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந்தபொழுது, என்னுடைய ஐந்து வயது மகன் ஹியுன்வோ அருகாமையில் அமர்ந்திருந்தான். திடீரென்று வாகன கதவு திறந்ததால் அவன் விழுந்து, சாலையில் உருண்டோடினான். இந்தச் சம்பவத்தை இன்னும் மோசமாக்கும் விதமாக, என் பின்புறம் வந்துக்கொண்டிருந்த பேருந்தின் அடியில் என் மகன் உருண்டு விழுந்துவிட்டான். எப்படியிருந்தாலும், அவன் அந்த சக்கரங்களுக்கு இடையில் போகாமல் பாதுகாக்கப்பட்டான்; அவன் முற்றிலும் காயப்படவேயில்லை!

இந்த விபத்திற்கு பிறகு நானும் என் மனைவியும் மாறத் தொடங்கினோம். அவள் ஜெபிக்க கற்றுக்கொண்டதால், என்னை சாந்தமான விதத்தில் கவனிக்கத் தொடங்கினாள். அவள் தலைமை போதகருடைய பிரசங்கத்தினாலும், தங்கள் கணவர்களுக்கு நன்றாய் பணிவிடை செய்கின்ற மான்மின் பெண் விசுவாசிகளிடமிருந்தும் கற்றுக்கொண்டதாக கூறினாள். அவள் மாறுவதை பார்த்தபொழுது, கருத்துக்களை முக்கியப்படுத்துகிற கணவனான என்நிமித்தமாக அவள் தொல்லையடைந்திருப்பாள் என்பதை நான் நினைக்கத் தொடங்கினேன். அவளுக்காக நான் மிகுந்த வருத்தமடைந்தேன். வீட்டு வேலைகளை செய்யும்படி நான் அவளுக்கு உதவ ஆரம்பித்தேன்.

பிப்ரவரி 2015ல், தேவனுக்கு முன்பதாக நாம் செய்த பொருத்தனைகளை நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்று தலைமை போதகர் சொன்னார். அப்பொழுது தேவனிடத்தில் நான் செய்த பொருத்தனை நினைவுக்கு வந்தது. 13 ஆண்டுகளுக்கு முன்பு நான் வேறு ஒரு சபைக்குச் சென்றுக்கொண்டிருந்தபொழுது, என் அடுக்குமாடி வீடு விற்கப்பட்டால் நான் ஒழுங்காக தசமபாகம் கொடுப்பேன் என்று பொருத்தனை செய்திருந்தேன். அந்த வீடு விற்கப்பட்ட பிறகும் நான் பொருத்தனையை கடைப்பிடிக்காமல் இருந்துவிட்டேன்.

நான் ஏறக்குறைய பதினொரு மாதங்கள் கொடுக்காமல் இருந்த தசமபாகத்தை கணக்கிட்டு கொடுத்தேன். நான் ஒரு கிறிஸ்தவனாய் தேவனுக்கு கொடுக்க வேண்டியதை தான் கொடுத்தேன், இருந்தும் அதற்கு அடுத்த மாதத்திலிருந்து அவர் என்னை ஆசீர்வதிக்க தொடங்கினார். என் சிறிய வாகனத்தின்மூலம் துரிதமான விநியோக சேவையை செய்து வருகிற நான் ஏறக்குறைய 4.7 முதல் 4.8 மில்லியன் வொன் வரை வழக்கமாக சம்பாதிப்பேன். ஆனால் தற்போது 5.8 முதல் 6.6 மில்லியன் வொன் வரை சம்பாதிக்கிறேன்.

என் கடந்தகால வாழ்க்கையை பற்றி மனந்திரும்பினதால், தேவனுடைய கிருபைக்கான நன்றியுள்ள இருதயத்தின்நிமித்தம் நான் மான்மின் தன்னார்வளர்கள் குழுவில் இணைந்து கொண்டேன். தேவையுள்ளவர்களுக்கு நான் களிகூர்ந்து உதவிச் செய்வதால் தேவன் ஆசீர்வாதத்தை தொடர்ந்து எனக்குக் கொடுத்து கொண்டிருக்கிறார்.

என் மனைவி கண்காணியை ரியூ வியட்நாமியர்கள் குழுவின் தலைவராக இருக்கிறாள். ஆராதனைகளை வியட்நாமியத்தில் மொழிபெயர்க்கிறாள். அவள் நல்ல பார்வைத்திறனை புதுப்பித்துக் கொண்டாள்; கைகள், விரல்களிலிருந்த மந்தத்தன்மையிலிருந்து சுகமானாள். ‘பாறைமீது’ இருந்த என் குடும்பம் ஆசீர்வாதமான ‘கூட்டிற்குள்’ இருப்பது முற்றிலும் தேவனுடைய கிருபைதான். நான் சகல நன்றிகளையும் மகிமையையும் தேவனுக்கே செலுத்துகிறேன். ஜீவனுள்ள வார்த்தையால் எங்களை வளர்த்தெடுத்து எங்களுக்காய் ஜெபித்துக் கொண்டிருக்கிற தலைமை போதகருக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

# “என் கார் 3மீட்டர் குன்றிலிருந்து விழுந்தும், நான் பாதுகாக்கப்பட்டேன்!”



**கண்காணியை சோயங் ச்சோ,**
**வயது 46, 30வது மாகாணம், மான்மின் தலைமை சபை**

டிசம்பர் 29, 2016ல் நான் க்யொங்கி டோ மாகாணத்திலுள்ள இயுவாங் நகரத்தில் அமைந்துள்ள கொரிய உணவகத்திற்கு முன்பு என் காரை நிறுத்த முயன்றபொழுது, என் கார் 3 மீட்டர் குன்றிலிருந்து விழுந்தது. என் காரின் கியர் (gear) பின்நோக்கியிருப்பதை அறியாமல் நான் ஆக்ஸிலேட்டரை அழுத்தி விட்டேன். அதனால்தான் என் கார் பின்நோக்கி வேகமாய் சென்று, தடுப்புகளை உடைத்து குன்றிலிருந்து விழுந்து தலைகீழாக மாட்டிக் கொண்டது. ஒரு நொடியிலே அனைத்தும் நடந்துவிட்டது.

விபத்து நடந்த பிறகு நான் தலைமை போதகரின் ஜெபத்தை என்னோடிருந்த ஜனங்களின் உதவியால் பெற்றுக்கொண்டேன். அருகாமையிலிருந்த பல்கலைக்கழக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பட்டேன். என் தலை, கழுத்துப் பகுதியை சிடி மற்றும் எக்ஸ்–ரே ஸ்கேன் செய்தனர். பரிசோதனையில் எனக்கு எந்தவித பிரச்சனையும் இல்லை என்றனர். அந்த விபத்திற்கு முன்பு காரை வேறொரு இடத்தில் நிறுத்த முயன்றதால் நான் சீட் பெல்ட் அணியவில்லை. அதனால் என் வலது கண்புருவத்திற்கு கீழே சிறிய காயம் ஏற்பட்டது. மேலும், என் கழுத்தில் பாதுகாப்பு கவசத்தை அணியவேண்டியிருந்தது. எனினும் நான் சீக்கிரமாய் புதுப்பிக்கப்பட்டதால் அதை மூன்று நாளைக்குள்ளாகவே அகற்றிவிட்டேன். தேவன் எனக்கு அளித்த கடமைகளை வழக்கத்தின்படி செய்யத் தொடங்கினேன்.

ஒருவேளை ஒரு காரானது இதுபோல மூன்று மீட்டர் குன்றிலிருந்து விழும்போது, காரின் கண்ணாடிகள் உடைந்து பாகங்கள் சிக்கி நொறுங்கிவிடும் என்பதால் ஓட்டுனர் தன் தலை, கழுத்து மற்றும் முதுகில் மோசமான காயங்களை அனுபவிக்க நேரிடும். ஆனால் என் சரீரத்தில் அப்படி எந்த மோசமும் நடைபெறவில்லை. ஏனென்றால் என் கார் தலைகீழாக கவிழ்ந்தபோதிலும் உள்ளே எனக்கு இடைவெளி இருந்தது. அதைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் நான் ஆச்சரியமடைகிறேன்.



கர்த்தருடைய அன்பினாலும் மேய்ப்பரின் ஜெப மண்டலத்திலும் என்னைப் பாதுகாத்த தேவனுக்கு நான் நன்றிகளை செலுத்துகிறேன்.

# “நான் மான்மின் துதிகள் மூலமாக புதிதாக்கப்பட்டதால் ஆசீர்வாதங்களை பெற்றேன்!”



**சகோதரர் ஹானியுல் வைஃபா,**
**வயது 22, நேபாள் மான்மின் சபை**

2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் என் மாமாவின்மூலமாக நேபாள் மான்மின் சபைக்கு நான் வந்தேன். நான் தேவ செய்திகளை கேட்டு, பாவங்கள் என்ன என்பதை கற்றுக் கொண்ட பிறகும் குடிப்பதையும் புகைப்பிடிப்பதையும் நான் நிறுத்தவில்லை. நான் ஆபாச படங்களையும் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் சில சமயங்களில் கண்ணீரோடு மனந்திரும்பினாலும், ஒரு மாதம்கூட மனந்திரும்புதலுக்கேற்ற வாழ்க்கையை வாழாமல் இருந்தேன்.

எப்படியிருந்தாலும், தேவனுடைய பிள்ளைகளாய் வெளிச்சத்தின் வாழ்க்கையை வாழ வலியுறுத்தும் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் வார்த்தைகளை கேட்டு, அவருடைய உண்மையான அன்பையும் கண்ணீரையும் கண்டபிறகு நாட்கள் நகர நான் மாறத் தொடங்கினேன். குறிப்பாக மான்மின் பாடல்கள் மூலமாக நான் மனந்திரும்புவதற்கான கிருபையையும், சத்தியத்தைப் பயிற்சி செய்வதற்கான பெலனையும் பெற்றுக்கொண்டேன்.

என்னுடைய சபையிலுள்ள இளம் வாலிபர்களாகிய நாங்கள் மான்மின் பாடல்களை கொரிய மொழியில் பாடும்பொழுது அதிகமான தொடுதலை உணர்ந்தோம். ஆகவே நாங்கள் எங்கள் சபையின் போதகர் கிரேஸ் லீ அவர்களிடம் கொரிய மொழியிலேயே நாங்கள் பாடல் பாட விரும்புவதாகச் சொன்னோம். நான் கொரிய மொழியை கற்றுக்கொள்ள துவங்கினேன். நான் கொரிய பாடல் வரிகளின் உச்சரிப்பை நேபாள் மொழியில் எழுதி, போதகர் லீ அவர்களிடம் காண்பித்தேன். அவர்கள் உச்சரிப்பை திருத்தம்செய்து அதற்கு கீழேயே உச்சரிப்பின் அர்த்தத்தையும் எழுதினார்கள். மற்ற அங்கத்தினர்கள் கொரிய மொழியில் பாடும்போது அதிக கிருபையையும் நிறைவையும் உணர்வதாகச் சொன்னார்கள். இளம் வாலிபர்கள், மாணவர்கள் மற்றும் பிள்ளைகளும்கூட ஏறக்குறைய அனைத்து பாடல்களையும் கொரிய மொழியில் மனப்பாடம் செய்துள்ளனர்.

மான்மின் துதிகள் மூலமாக தேவனிடத்திலிருந்து திரளான ஆசீர்வாதங்களை நான் பெற்றுக்கொண்டேன். இதற்கு முன்பு ஒரு வேலையில் சேரவே மிகவும் கடினமாக இருந்தபோதிலும், நான் ஒரு வேலையைப் பெற்றுக்கொண்டேன். தற்போது ஆவிக்குரிய காரியங்கள் மேல் வாஞ்சையாயிருக்கிறேன். என்னுடைய குடும்பத்தில் பிரச்சனைகளும் சண்டைகளும் இருந்தபோதிலும், நாங்கள் உகந்த கிறிஸ்தவ வாழ்க்கையை வாழத் துவங்கியதிலிருந்து இப்பொழுது சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் இருக்கிறோம்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com